Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 346/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகாலெட்சுமி | ஜாதி | : | |
| க/பெ | : | சுப்புராயலு | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | மேலக்கோட்டை | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 62/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.11.2025.

(1, 2 எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் மேலக்கோட்டையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 05.05.2017 அன்று மதியம் 01.00 மணியைபோல நான் எனது வீட்டுக்கு பக்கத்தில் சின்ன பெட்டிக்கடை வைத்துள்ளேன். இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். ஒரு நபர் வாகனத்தில் அமர்ந்திருந்தார். மற்றொரு நபர் இறங்கி வந்து என்னிடம் தண்ணீர் கேட்டார். நான் பாட்டிலில் உள்ள தண்ணீர் வேண்டுமா அல்லது பாக்கெட்டில் உள்ள தண்ணீர் வேண்டுமா என்று நான் கேட்டு திரும்பியபோது, அந்த நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த 6 பவுண் தங்க செயினை பிடித்து இழுத்தார். நான் சுதாரித்து செயினை பிடித்துக்கொண்டேன். இருப்பினும் கால் பகதி செயினை பறித்துக்கொண்டு இரண்டு பேரும் அவர்கள் வந்த வாகனத்தில் ஏறி சென்றுவிட்டார்கள். இது சம்மந்தமாக நான் சின்னாளபட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடமிருந்து பறித்து சென்ற தங்க செயினை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டார்கள். நீதிமன்றத்தில்

இருந்து 1 பவுண் அளவுள்ள தங்க செயினின் பகுதியை பறித்து சென்ற தங்க செயினின் பாகத்தை நான் மனு செய்து பெற்றுக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். வழக்கின் எதிரிகளை பற்றி உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor